பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 91

விலங்கியல்:
திரு. ஈசன்
திரு. ஞானம்
திங்கள்-வெள்ளி 4.30 மணி

தூய பிரயோக } கணிதம்
திரு. கிருஷ்ணு
சனி-ஞாயிறு 8.30 - 10.30 மணி

நிரு ரியுசன் சென்ரர்,
கோண்டாவில்.

# உதயன்

விலை ரூ2/50

A/L 91

பௌதிகவியல்:
திரு. சௌந்தி
செவ் - வியா - 1.00 மணி
இரசாயனவியல்:
திரு. செல்வா
செவ் - வியா 2.00 மணி
தாவரவியல்:
திரு. பாலா
சனி - ஞாயிறு 4.30 மணி

நிரு ரியுசன் சென்ரர்,
கோண்டாவில்.

சுடர்: 4 சுக்கில ஹு சித்திரை மீ 05 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 11 (18-04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-112

## நாரம்மல பொலிஸ் நிலையம் நேற்றுத் தாக்கப்பட்டது

கொழும்பு, ஏப்ரல் 18

குருநாகல் மாவட்டத்தில் உள்ள நாரம்மல பொலிஸ் நிலையத்தின் மீது தென்பகுதித் தீவிரவாதிகள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் தாக்குதல் இடம்பெற்றது.

இராணுவமும் பொலிஸாரும் தீவிரவாதிகளை எதிர்த்து தாக்கினர். அப்போது 2 தீவிரவாத சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின்போது ஆயுதங்கள் சில கைப்பற்றப் பட்டன என்று அரசுத் தகவல் ஒன்று தெரிவித்தது. (ஒ-எ)

## எம்பிலிப்பிட்டியாவில் கண்ணி; 4 சிப்பாய்கள் பலி

கொழும்பு, ஏப்ரல் 18

தென்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நான்கு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் எட்டுச் சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

எம்பிலிப்பிட்டியாவில் இச் சம்பவம் இடம்பெற்றது. (ஒ-எ)

### தீவிரவாதிகள் சரணடைய அமைக்கப்பட்ட

## வரவேற்பு நிலையம் நேற்று தீக்கிரையானது

கொழும்பு, ஏப்ரல் 18

மாத்தறை மாவட்டத்தில் அரச அலுவலகம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு நிலையம் ஒன்று இனந் தெரியாதோரால் நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்றுச் சரணடையும் தென் இலங்கைத் தீவிரவாதிகளை வரவேற்பதற்காக இந்த மையம் அமைக்கப்பட்டது.

## மட்டக்களப்பு நகருக்குள் வாகனங்கள் செல்லத் தடை!

கொழும்பு, ஏப். 18

மட்டக்களப்பு நகருக்கு தனியார் பஸ்கள் மற்றும் வாகனங்கள் பிரவேசிக்க நேற்றுத் தடை விதிக்கப்பட்டது.

அரசு பஸ்கள் மட்டுமே கடும் சோதனைக்குட்படுத்தப் பட பின்னர் நகருக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

திருகோணமலையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் போன்ற ஒன்று மட்டக்களப்பில் இடம்பெறக்கூடும் என்ற தகவலைத் தொடர்ந்தே நேற்று இந்தக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் இந்திய அமைதிப்படையும்இலங்கைப் பொலிஸாரும் மட்டக்களப்பில் நேற்று கூட்டு ரோந்தை ஆரம்பித்தனர். (ஒ எ)

### குண்டுவெடிப்புச் சம்பவம்:

## திருமலையில்காணமற்போன தமிழர் எண்ணிக்கை - 29

கொழும்பு, ஏப்ரல் 18

கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது காணமற்போன தமிழரின் எண்ணிக்கை ஞாயிறு வரை 29 ஆக அதிகரித்தது.

இதனிடையில் குண்டுவெடிப்பில் பலியானவர்களில் பதினெரு பேரின் சடலங்கள் அடையாளங் காணப்படாத நிலையில் திருகோணமலைக் கடற்படை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை அரசு ஆஸ்பத்திரியிலும் 2 சடலங்கள் அடையாளங் காணப்படாமல் உள்ளன.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து காணமற்போனவர்களில் இரண்டு தமிழ் ரிஸர்வ் பொலிஸ்காரரும் உள்ளனர். குண்டு வெடித்தபோது இவர்களிருவரும் அந்த இடத்தில் கடமையில் இருந்தார்கள்.

இதனிடையில் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப் பட்ட கார் திருமலையைச் சேர்ந்த ஒருவருடையது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

குண்டு கொண்டுவரப்பட்ட காரைக் கடமையில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பாலித்த என்பவர் சோதனையிட்ட சமயமே குண்டு வெடித்தது என்று கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பு தொடர்பான முழு விவரங்களையும் கொண்ட அறிக்கையை திருமலை பொலிஸ் அதிபர் ஜெயசுந்தர பாதுகாப்புஅமைச்சுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். (ஒ-எ)

## 20 ஆயிரம் ரூபா வரை மத்தியவங்கி சலுகைப்பணம்

### பாதிக்கப்பட்ட நிதி வைப்பாளருக்கு

கொழும்பு, ஏப் 18

தடுத்துவைக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்களில் (பினன்ஸ் கம்பெனிகளில்) முதலீடுசெய்துள்ளவர்களுக்கு இலங்கை மத்திய வங்கி இப்போது சலுகை அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செலுத்துகின்றது.

இதற்காக மத்திய வங்கி 32 கோடி 50 லட்சம்ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள யூனியன் ட்ரஸ்ட்இன் வெஸ்ட்மன், ஹோம் பினன்ஸ், செவன பினன்ஸ், ஹிடேகி, சாராபூமி ஆகியவற்றில் பணவைப்புச் செய்து பாதிக்கப்பட்ட 24 ஆயிரத்து 573 பேருக்கு இப் பணம் பகிர்ந்து வழங்கப் படுகிறது.

20 ஆயிரம் ரூபாவும் அதற்குக் குறைவானதொகையையும் வைப்புச்செய்தவர்களுக்கு வைப்புச் செய்த முழுத்தொகையும் வழங்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஞாயிறு இரவு தனியார் பஸ் மீது கிரனேட் வீச்சு!

# கொழும்புச் சம்பவம்:

# 15 பேர் நிலை கவலைக்கிடம்

## பெரும்பாலானோர் தமிழர்கள் மேலும் 25 பேர் காயம்

கொழும்பு, ஏப்ரல் 18

கடந்த ஞாயிறு இரவு 7.30 மணியளவில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்படவிருந்த தனியார் பஸ்கள் மீது கொழும்பில் இரு இடங்களில் வைத்து கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தில் 40 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவங்களில் காயமடைந்தோரில் பெரும்பான்மையானோர் தமிழர்களே என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொள்ளுப்பிட்டி பிளவர் வீதியில் இடம்பெற்ற சம்பவத்திலேயே அதிகமானோர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிளவர் வீதியில் வைத்துத் தனியார் பஸ் மீது கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தில் 30 பேர் காயமடைந்தனர் என்றும் —

அவர்களில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது.

வெள்ளவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தனியார் பஸ் அலுவலகம் ஒன்றின் முன்னால் கிரனேட் வீசியதில் 10 பேர் வரை காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் வர்த்தக வங்கியின் வெள்ளவத்தைக் கிளைக்கு முன்னால் இடம்பெற்றது.

இதேசமயம் கொழும்பு கோட்டைப் பகுதியில் கட்டடம் ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டது. இதனால் கட்டடம் சிறிது சேதமுற்றது. வேறு சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. (உ-எ)

### போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 18

பலாலி வீதியில் கந்தர்மடம் முதல் திருநெல்வேலி வரையான பகுதி நேற்று முதல் மீண்டும் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து இந்தப்பகுதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. (ஒ-9)

### தீவிர ரோந்து

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 18

நேற்று பருத்தித்துறை வீதிகளில் அமைதிப் படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

திடீர் சென்றிகளையும் அவர்கள் ஏற்படுத்தி இருந்தனர். (ஒ-160)

### பிரதமர் விஜேதுங்க சீன செல்கிறார்

கொழும்பு, ஏப். 18

பிரதமரும், நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க தலைமையில் அரசாங்கத் தூதுக்குழு ஒன்று இம்மாதம் 29ஆம் திகதி சீன செல்கிறது.

வருகிற மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பீகிங்கில் நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வார்.

பீகிங்கில் சீனத்தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சு வார்த்தைகளை திரு. விஜேதுங்கா நடத்துவார். பிரதமர் வருகிற மாதம் 9ஆம் திகதி கொழும்பு திரும்புவார். (ஒ-எ)

### ஹெலி விழுந்து நொருங்கியது

சென்னை, ஏப். 18

சென்னை தாம்பரம் அருகில் ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியதால் அதிலிருந்த பயிற்சி விமான ஓட்டிகள் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

விங் கொமாண்டர் தாஸ்குப்தாவும் கப்டன் சந்தும் இறந்தவர்கள் என்று பொலிஸார் அடையாளம் கண்டனர். (ஒ-எ)

### ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை 19ஆம்திகதியும் 21ஆம், 22ஆம் திகதிகளிலும் நடைபெற இருக்கிறது.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் இக் கருத்தரங்கு நடைபெறும்.

பருத்தித்துறை வட்டார ஆசிரியர்களையும், முன்னர் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்து கொள்ளாத ஆசிரியர்களையும் இக் கருத்தரங்குக்குச் சமூகமளிக்குமாறு கல்விப்பகுதி கேட்டுள்ளது. (ஒ)

### முச்சந்தி முரளி



வரவேற்பு நிலையங்களுக்கு தீயினால் வரவேற்புக் குடுத்து பாதுகாப்பு நிலைமையை இன்னும் சூடேற்ற ப்பாக்கினம் போலை...?

## கச்சாயில் நேற்று மோதல்; மூவர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப். 18

சாவகச்சேரி, கச்சாய் பகுதிகளில் நேற்று மோதல் சம்பவமொன்று இடம்பெற்றதாக அறியவருகிறது.

கச்சாய் தெற்குப் பகுதியில் உள்ள கடற்கரை வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இந்தியப் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதை அடுத்தே மோதல் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோதலின்போது ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது.

இதில் ஒரே கும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர். வே காசிப்பிள்ளை (வயது65), கா. சுந்தரமூர்த்தி (வயது 24), தமிழழகன் (வயது 3) ஆகியோரே அந்த மூவருமாவர்.

இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## நல்லூர் சங்கிலியன் வீதியில் ஞாயிறிரவு துணிகரகொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள ஒரு வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமைஇரவு சுமார் ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான நகைகள் ஆயுதந் தரித்த கொள்ளைக் கோஷ்டியால் சூறையாடப்பட்டது.

இது குறித்து கூறப்படுவதாவது:-

சம்பவம் நடைபெற்ற வீட்டில் குடியிருப்பவர் வீட்டின் 'கேற்'றைப்பூட்டும்பொருட்டு சென்றார். 'கேற்' றடியில் அவரைச் சூழ்ந்த ஆயுதக் கோஷ்டியினர் சத்தம்போடக் கூடாதென எச்சரித்து, அவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவைச் சேர்ந்தவர் தலவாக்கொல்லையில் கொலை

### ஆசிரியையான மனைவி ரிமாண்டில்

நுவரெலியா, ஏப்ரல் 18

ஆசிரியை ஒருவர் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து தமது கணவனைக் கொலை செய்தாரா?

இப்படிச் சந்தேகிக்கப்படும் சம்பவம் ஒன்று மலையகத்தில் தலவாக்கொல்லைப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

தலவாக்கொல்லைப் பகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றின் ஆசிரியையே இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:-

கணவன்—மனைவிக்கு இடையில் நீண்ட காலம் மனஸ்தாபம் இருந்து வந்ததாம்.

கணவன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து தலவாக்கொல்லையில் சிறிது காலம் இருந்தார். அப்போது அடிக்கடி இருவருக்கும் தகராறு, அடிதடி சச்சரவுகள் நடப்பதுண்டு.

கணவனின் தொல்லையைப் பொறுக்கமுடியாத ஆசிரியை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18 - 04 - 1989
சித்திரை - 05
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.33 முதல் 12.03 வரை
ராகுகாலம்:
03.03 முதல் 04.33 வரை

### நெல்லியடியில் வேட்டுக்கள்

வல்வெட்டித்துறை, ஏப். 18

நேற்று நெல்லியடிப்பகுதியில் அடிக்கடி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

காலையில் ஆரம்பமான வேட்டுக்கள் நண்பகல் வரையில் இடையிடையே கேட்டபடி இருந்தன.

இதனால் நெல்லியடிப் பகுதியில் பதற்றம் நிலவியது. (ஒ-160)

### வான்மீது சூடு

யாழ்ப்பாணம், ஏப் 18

நேற்று மாலை மானிப்பாயில் சுட்டுடைப் பகுதியில் வான் ஒன்றில் வந்தவர்கள் மீது அமைதிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

வானில் வந்தவர்கள் பின்னர் அடையாளம் காணப்பட்டு தாக்குதல் நிறுத்தப் பட்டது.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. [ஒ]

### நால்வர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப்ரல் 18

நாட்டின் தென்பகுதியில் நேற்று நான்கு பேர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மிரிக்கெட்டியாவில் தோட்டத்துரை ஒருவரும் தங்காலையில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரம் பகுதியில் தந்தையும் மகனும் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

### 9 கோடி ரூபா நிதியுதவி

கொழும்பு, ஏப்ரல் 18

யு. எஸ். எயிட் நிறுவனம் தனது நிதி உதவியின் முதல் தவணைப் பணமான ஒன்பது கோடி ரூபாவை இலங்கை அரசுக்கு நேற்று வழங்கியது.

வன்செயல்களில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் புனர்வாழ்வுக்கு இப்பணம் செலவழிக்கப்படும் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

### அதிபர் பரீட்சை மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்த அதிபர் பரீட்சைகள் மீண்டும் பின்போடப்பட்டுள்ளன.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியிலும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் குறிப்பிட்ட திகதிகளில் இப்பரீட்சைகள் நடத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரீட்சைகள் மீண்டும் மே மாத நடுப்பகுதியில் வரும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தப்படும் என அறியவருகிறது. (ஒ-9)

கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம்
பிரதி செய்ய நாடுங்கள்!
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனை

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் T.V. Typewriter Voltage - Regulator, Cycle, Singer Machine மற்றும் பல விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 343, பருத்தித்துறை வீதி, அரசடி சந்தி, நல்லூர். [10573]

### வீடு வாடகைக்குத் தேவை

ஓரளவு வசதியான வீடு நல்லூர் அல்லது கந்தர்மடம் சுற்றுடலில் வாடகைக்கு அவசரமாகத் தேவை. தொடர்பு: C/o 51 உதயன் காரியாலயம் யாழ்ப்பாணம். [3373]

### தவறிவிட்டது

சேனாதிராசா ஸ்ரீதரன் என்ற பெயருடைய அடையாள அட்டை மானிப்பாய் றவுக்கைச் சந்தைக்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் அந்த விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [182]

ஜெயலதா கதிர்காமநாதன் ஆகிய எனது அடையாள அட்டையும் பேர்ஸும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானமும் வழங்கப்படும். க. பன்னிருகரம், சாந்தி மரக்காலை, இல. 102, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [3372]

### கோழிக் குஞ்சு விநியோகம்

**UPLANDS FARM**

(Cobb) இன புரொயிலர் குஞ்சு (25-04-1989) செவ்வாய்க்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10580)

### கோழிக்குஞ்சு விநியோகம்

**UPLANDS FARM**

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, கறுப்புசேவல் குஞ்சு (18-4-89) செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். [சடுப்பூசி போடப்பட்டது.) முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (134)

### தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, போட்டோஸ்ரற், ரோணியோ வேலைகளில் அனுபவம் மிக்க பெண் ஊழியர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்: சாயி என்ரபிறைஸ், 303 எ, பலாலி வீதி, திருநெல்வேலி. [10604]

### விற்பனை

4 அங்குலக் கன கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு. 5, 3 அங்குலக் கன கற்களுக்கும் ஓடர் ஏற்கப்படும். ஆனந் பண்ணை, மயிலிட்டி வடக்கு. (153)

### அச்சகம் விற்பனைக்கு

உன்னதமான நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் அச்சியந்திரம், புத்தம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் புதியவை. உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்: முகாமையாளர், மலரகம், ஏழாலை வடக்கு, ஏழாலை. [183]

### பொது அறிவுப்போட்டி 03

அன்பு கல்வி நிறுவனம் நடாத்தும் இப் போட்டி 1989-04-20 வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெறும். மூன்று பணப் பரிசில்கள். பிரவேசம் 10 ரூபா 1989- 04- 19 ஆம் திகதிக்கு முன்பு பதிக. உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (3370)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். 10728)


மாணவர்:

## ஆற்றல் திறமையை வெளிப்படுத்த விளையாட்டுப் போட்டிகள் அவசியம்

### விளையாட்டுப் போட்டியில் கொத்தணி அதிபர்பேச்சு

கோப்பாய், ஏப்ரல் 18

மாணவர்களின் ஆற்றலையும் திறமையையும் வெளிப்படுத்த விளையாட்டுப் போட்டிகள் அவசியமாகும்.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கோப்பாய் பாடசாலைகளின் கொத்தணி அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் மாணவர் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்க உதவுகிறது.

பாடசாலை மாணவர்கள் அதிகளவு அக்கறையுடன் இவ் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதைக் காணக் கூடியதாகவுள்ளது. விளையாட்டுப் பயிற்சிகளைத் தொடர்ந்து நடத்தி மாணவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறினர்.

விநோத உடைப் போட்டியில் இராசரத்தினம் இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

அணிநடை ஆண்கள் பிரிவில் இராமநாதன் இல்லமும் பெண்கள் பிரிவில் இராசரத்தினம் இல்லமும் முதலிடங்களைப் பெற்றன.

விளையாட்டுப் போட்டி முடிவில் இராமநாதன் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே நாவலர், இராசரத்தினம் இல்லங்கள் பெற்றுக் கொண்டன.

பழைய மாணவர்களுக்கான ஓட்டப் போட்டியில் மா. செல்வகுமார் முதலிடத்தைப் பெற்றார். [ச-72]


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

வேலணை கிழக்கு

அமரர்

**திருமதி உருக்குமணி இராசரத்தினம்**

(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு:- 15- 05 - 1914 நிறைவு - 02-05- 1985

திதி:- 18- 04 1989

அன்புடைய மனைவியாய் தாயாய் நல்ல
அருமைசேர் மாமியாய்ப் பாட்டி யாக
நன்றிகளை உருக்குமணி அள்ளி வீசி
நயந்திட்ட நினைவுகளை நிதமும் எண்ணிக்
குன்றாத பேரின்பப் பெருவாழ் வுக்காய்க்
கூடியே திருவருளை நாடிச் சென்ற
அன்றுமுத லின்றுவரை நாலாண்டாக
ஆதரவுக் கேங்கியே வாழ்கின்றோமே!

**கணவர், மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

மலரகம்,
வேலணை -2. (184)


மாணவர் இலவச மதியபோசனம்:

# சூழலில் உள்ள பொருள்கள் பெரும் அளவில் பயன்படுத்தப்படும்

சுன்னாகம், ஏப்ரல் 18

யாழ். மாவட்டப்பாடசாலைகளில் கல்விபயிலும்மாணவர்களுக்கு இலவச மதிய போசனம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

மதிய போசனம் வழங்குவதற்காக மாணவன் ஒருவனுக்கு நாளொன்றிக்கு மூன்று ரூபா ஒதுக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூழலில் உள்ள பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சத்துள்ள உணவுகள் சுகாதார முறையில் மாணவர்கள் பெற்றுக் கொள்ள இருக்கின்றார்கள்.

தினமும் வெவ்வேறு வகையான உணவுப்பண்டங்களை மாணவர் பெற்றுக்கொள்வதற்கு வசதியான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

உணவுப்பண்டங்களை தயாரிப்பதற்குத் தேவையான பாத்திரங்களையும் உபகரணங்களையும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் நலன்விரும்பிகள், தருமசிந்தையுள்ளவர்கள் ஆகியோரிடமிருந்து சேகரிப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஐநூறு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைக்கு உணவுப்பாத்திரங்களுக்காக மூவாயிரத்து எழுநூற்றைந்து ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது?

பணிசுடன்பால்பழம் கடலைவகை கூட்டுச்சாதம் பாணும் சாம்பாரும் பழமும் பயிற்றம் துவையல் கறிபணிஸ் புளிச்சாதம் மரக்கறி ரொட்டி ஆகிய உணவுவகைகளை நாளுக்கு கொன்றாகப் பாவிக்கக் கூடியதான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. [ச-27]

## மனித வளத்தில் நம்பிக்கை வைத்து ஜனநாயக வழியில் ஜனசக்தி

### உடுவில் உ. அரசாங்க அதிபர் உரை

மானிப்பாய், ஏப்ரல் 18

''மனித வளத்தில் நம்பிக்கை வைத்து மனிதனால் ஜனநாயக வழியில் செய்யப்படும் திட்டமே ஜனசக்தி திட்டம். உணவு முத்திரைக்கு பதிலாக கொண்டு வரப்பட்ட திட்டமல்ல இது. உணவு முத்திரை இல்லாதவர்களும் தகுதியுடையவர்களாக இருப்பின் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்''.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கந்தரோடை கிராமசேவகர் பிரிவில் உள்ள பதினொரு குடியிருப்புக்களுக்கான மாற்ற முகவர்களை தெரிவு செய்யும் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ஜனசக்தி திட்டம்பற்றி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

கந்தரோடை கிராமசேவையாளர் திரு. எஸ். வேலும்மயிலும் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. மகாலிங்கம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது ''அரசாங்கத்தின் சகல திட்டங்களிலும் முதன்மைத் திட்டமாக இது கருதப்படுகிறது.

மற்றைய திட்டங்கள் இத்திட்டத்துக்கு உதவி செய்யும் திட்டங்களாகவே கருதப்படும்.

சகல அரசாங்க ஊழியர்களும் இத்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஒத்துழைப்புத்தர மறுப்பவர்கள் அல்லது அசட்டை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையை அரசாங்க அதிபர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அரசாங்கம் வழங்கியுள்ளது.

''இரண்டு அங்கத்தவர்களுக்கு அதிகமான அங்கத்தவர்களை உள்ள சுய தொழில் செய்யக்கூடிய 700 ரூபாவுக்குட்பட்ட மாதவருமானமுடைய குடும்பங்கள் ஜனசக்தி திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஏழைகளைக் கைதூக்கிவிடும் இத்திட்டம் ஏழைகளின் சக்தியில் தான் தங்கியுள்ளது.

செயல்திறன், ஆற்றல், புத்திகூர்மையுடைய ஏழைகளை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதே இதன் குறிக்கோளாகும்''.

இப்படி அவர் கூறினர். (ச 90)

மாவட்டத்தில் வாழும்

## உஷ்ண வியாதிகள்

குருநகர், ஏப்ரல் 18

குடாநாட்டில் இப்பொழுது கடும் வரட்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக உஷ்ண சம்பந்தமான ரோகங்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இக்காலத்தில் பெரிதும் தேவையான செவ்விளநீர் சந்தைகளில் எட்டு, பத்து ரூபாவுக்கும் விலை போகிறது. [இ-51]

## முறைசாராக் கல்வி சான்றிதழ்கள் வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற தொழிலகத் தையலும் உடையமைத்தலும் பயிற்சி நெறியில் [1987-88] கற்ற மாணவியருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் விழாவுக்கு மேற்படி பாடசாலை அதிபர் திரு. ஆ. சமலநாதன் தலைமை வகித்தார்.

பிரதம அதிதியாக தொழில்நுட்ப பாட முறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக முறைசாராக் கல்வி வெளிக்கள உத்தியோகத்தர்கள் திரு. வே. பாலகிருஷ்ணன், திரு. எஸ். சி. சிதம்பரநாதன் ஆகியோரும் முன்னைநாள் அதிபர் திரு. எஸ். எம். மூர்த்தியும் கலந்து கொண்டனர். [க]

## ஓடி ஆடி விளையாடுவதால் உள்ளம் உறுதி அடைகிறது

### கல்வி அதிகாரி பேச்சு

சுன்னாகம், ஏப்ரல் 18

சிறுபிள்ளைகள் விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபட வேண்டும். ஓடி ஆடி விளையாடவேண்டிய சிறுவர்களை அவ்வாறான நேரங்களில் ரியூட்டறிகளுக்குச் செல்லுமாறு பெற்றோர்கள் நிர்ப்பந்திக்கின்றனர். ஓடி ஆடி விளையாட விடுவதால் உள்ளம் உறுதி அடைகின்றதென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

யாழ் கல்வித்திணைக்களகல்வி அதிகாரி திரு. க. புலேந்திரன் ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. ஐயா நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. க. விவேகானந்தன் மங்கல விளக்கேற்றியும், திரு. யோன்துரைராசா பாடசாலைக்கொடியை ஏற்றியும் ஆரம்பித்து வைத்தனர்.

வைபவத்தில் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட (உடற்கல்வி) கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராஜா கலந்து கொண்டு உரையாற்றினார்.

ஏழாலை தெற்கு தென்னிந்திய திருச்சபை பங்குக்குருவண. எம். தேவதாசன் உரைநிகழ்த்தியதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினர்.

இப்போட்டியில் சிவப்பு இல்லம் முதலாம்இடத்தையும் பச்சை இல்லம் நீல இல்லம் என்பன முறையே இரண்டாம், மூன்றும் இடங்களையும் பெற்றன. (க- 27)

## வட இலங்கை சங்கீதசபையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்

### சபாநாயகத்துக்குப் பாராட்டு

கொக்குவில, ஏப்ரல். 18

வட இலங்கை சங்கீதசபையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் வெ. சபாநாயகம்.

வட இலங்கை சங்கீத சபையின் முன்னைய தலைவர்களில் ஒருவரான திரு. வெ. சபாநாயகத்தைக் கௌரவித்துப் பாராட்டிப் பேசுகையில் சபையின் உபசெயலாளர் திரு. என். நவரட்ணம் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ் மாவட்டப் பதில் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி தலைமையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சபாநாயகம், சபையின் கௌரவ செயலாளர் திரு. சி. மன்மதராஜாவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இச் சபையின் முன்னாள் காரியதரிசி திரு. எஸ். கந்தமூர்த்தி பேசுகையில், சங்கீத சபையின் சான்றிதழ் பெற்ற ஆண்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக இருப்பதால் ஆண்கள் இதில் அக்கறை செலுத்துவதில்லை என்றும், இப்பகுதி பாடசாலைகள் எதிலும் மிருதங்கம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

மூன்று நான்கு பாடசாலைகளுக்கு ஒரு மிருதங்க ஆசிரியர் வீதமேனும் நியமிப்பதற்குத் திரு. சபாநாயகம் பாடுபடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்,

திரு சபாநாயகம் தமது பதிலுரையில் கூறியதாவது ''நான் தமிழ் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்கும் ஒருவன்.

தேசிய உடையுடனேயே சென்று பல விடயங்களையும் கவனிப்பேன்.

நாம் மேலைத்தேய மோகத்தில் மூழ்கி எம் பாரம்பரியத்தைக் கைவிடக் கூடாது.

எம் இசையாசிரியர்கள் சிலர் கோயில்களில் தேவாரம் பாட பின்னிற்கின்றார்கள்.

இசையாசிரியர்கள் சமயத்தோடு கூடிய தொடர்பு கொண்டு சமயத்தை வளர்க்க வேண்டும்.

மத்திய அரசும் சமயத்தை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றது. மொழிகள் வளர வேண்டும் என்பதிலும் கல்வியமைச்சர் அக்கறை கொண்டுள்ளார். இப்படி அவர் கூறினர். (ச-69)

## ஜும் ஆப் பள்ளியில் ரமழான் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஏப்ரல் 18

யாழ்ப்பாணம் கோட்டை ஜும்ஆப் பள்ளியிலும் புனித ரமழானை முன்னிட்டு பல வருடங்களுக்குப் பின்னர் தராவீஹ், வித்ரு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிகளை கோட்டை ஜும்ஆப் பள்ளி பிரதம பேஷ்இமாம் மௌலவி; எஸ். எம். பௌஜுன் [சபூர்] அவர்கள் நடத்திவருகின்றார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் பள்ளி நிர்வாகிகளும், முன்னேற்றச் சங்கத்தினரும் செய்துள்ளதாக மௌலவி பௌஜுன் அவர்கள் கூறினார்கள். [க]

## 25க்கும் குறைந்த ஆசன பஸ் சேவை நிறுத்தப்படும்

கொழும்பு, ஏப்ரல் 18

கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குள் 25 க்கும் குறைந்த ஆசனங்களைக் கொண்ட பஸ்களின் சேவை நிறுத்தப்படும்.

இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளதாக மேல்மாகாணசுகாதார பொருளதார கட்டமைப்பு அமைச்சர் திரு மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். (இ-7)


## ஓராண்டு நினைவஞ்சலி



**நாகலிங்கம் விநாயகமூர்த்தி**

(விவசாயத் திணைக்கள A. O.)

| வியனுலகு | விண்ணுலகு |
|---|---|
| 02 - 10 - 1948 | 29 - 04 - 1988 |

திதி 18 - 04 - 1989

ஓராண்டு சென்றதையா
எமதில்லம் இருண்டதையா
உமை நினைத்த போதினிலே
எமதுள்ளம் துடிக்குதையா
வேதங்கள்கூட எங்கள் வேதனையைத் தீர்க்கவில்லை
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு - நீங்கள்
மீளாத் துயில்கொள்ளச் சென்றதெங்கே?
மனையாளும் பிள்ளைகளும் சிந்தை கலங்கி நிற்கின்றோம்
இத்தரணியில் வாழ்ந்தது போதுமென்று
உங்கள் தந்தையுடன் சென்றுவிட்டீர்கள்!

**மனைவி, மக்கள்**

65, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். (10610)

## 95 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்:
19- 03- 1967

ஆண்டவன் அடியில்:
14- 01- 1989



செல்வன்

**மீனாட்சி சுந்தரம் சண்முகசுந்தரம்**

(தம்பி)

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி அகால மரணமடைந்த செல்வன் மீ. சண்முகசுந்தரம் அவர்களின் ஈமக்கிரியையில் நேரில் வந்து கண்ணீர் மல்கக் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 18-04- 1989 இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

18- 04- 1989 இல் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

உன் பிரிவால் வாடும்:
தந்தை, தாய், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

உமையாள்புரம்,
ஆனையிறவு. (10565)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு

# காணிகளைச் சொந்தமாக்கும் உறுதிகள் வழங்கப்பட்டன

சுவர்ண பூமித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி விவசாயிகளுக்கு காணிகளை சொந்தமாக்கும் உறுதிகள் வழங்கப்பட்டன.

முன்னர் அரச காணிகளில் விவசாயம் மேற்கொண்டு வந்த சில விவசாயிகளுக்கு உறுதிகள் வழங்கப்பட்டன.

காணி உறுதிகளை கிளிநொச்சி அரசாங்கஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் வழங்கினார்.

வைபவத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. குணராஜா, முன்னாள் அரசாங்க அதிபர் திரு. தேவசிகாமணி ஆகியோரும் உரையாற்றினார்கள். [இ-ரி]

## கொம்பியூட்டர் பயிற்சி

Diploma in Data Processing & Computer Programming Course

**புதிய பிரிவுகள்:**

BASIC : 26-04-89 (Week day) 10.00a.m
ADVANCED BASIC : 29-04-89 (Weekend) 1.00p.m

**1st Payment Rs. 500/-**

IBM SUPER/XT, IBM COMPATIBLE, APPLE உட்பட பல நவீன Computerகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அங்கோரம்பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

IDP **Computer Centre,**
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோயிலடி)
Branch: 7th Mile Post, Mallakam.
[சி-2266]

கப்பலில்

## ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

✶ 2nd Officers ✶ Bosan
✶ 3rd Engineer ✶ Oiler
✶ Radio Officers ✶ AB

மேற்காணும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

✶ சுவிஸ் ✶ இத்தாலி
✶ பிரான்ஸ் ✶ ஜேர்மனி
✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING & TRAVELS,**
New Lalitha Building,
185/2, KASTHURIAR ROAD.
JAFFNA
(C/2282)

## Y. W. C. A.

Hostel accomodation available for students and Working girls from 1st May at 41, 4th Cross Street Contact President.

Short - hand typing, scientific dress making, cake iceing, cookery, orders for dressess also will be undertaken. Classes will Commence from 1st May.

1989- 05- 01ஆந் திகதி தொடக்கம் பாடசாலை மாணவியருக்கும், பணியாற்றும் நங்கையருக்கும் விடுதி வசதியுண்டு. அத்துடன் சுருக்கெழுத்து, தட்டச்சு, விஞ்ஞான முறையில் ஆடை தயாரிப்பு, சமையற்கலை, கேக் ஐசிங் என்பனவும் மேற்படி திகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்பு:

தலைவர்
**வை. டபிள்யூ. சி. ஏ.**
99, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/2280)

## திருமலை மாவட்டத்தில்:

# ஆசிரிய நியமனம் கிடைக்காதோர் கல்வி அமைச்சுக்கு படையெடுப்பு

மூதூர், ஏப்ரல் 18

திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரிய நியமனம் கிடைக்காத தமிழ் பேசும் இளைஞர்கள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கும், திருகோணமலை மாவட்டக்கல்வி அலுவலகத்துக்கும் படையெடுத்து வருகின்றனர்.

ஆரம்பக் கல்வி ஆசிரிய நியமன நேர்முகத் தேர்வுக்கு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 78 தமிழ் பேசும் இளைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்விதம் அழைக்கப்பட்டவர்களில் 48 பேருக்கே ஆரம்பக்கல்வி உதவி ஆசிரிய நியமனம் கிடைத்துள்ளது.

இதனால் நேர்முகத் தேர்வுக்குச் சென்றும் ஆசிரிய நியமனம் கிடையாத இந்த இளைஞர்கள் மனம் குழம்பியுள்ளனர்.

தமக்கு ஆரம்பக் கல்வி ஆசிரிய நியமனம் வழங்கப்படாதது பற்றி இவர்கள் திருகோணமலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராசா, வடக்கு-கிழக்கு மாகாண அரசு முதலமைச்சரும், கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு. அ. வரதராஜப் பெருமாள் ஆகியோரிடம் புகார் செய்துள்ளனர். [ச-க-98]

### பல்கலைக்கழக மாணவன் விடுவிக்கப்பட்டார்

கரவெட்டி, ஏப். 18

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை மூன்றாம் ஆண்டு மாணவனை தர்மராஜா ராகவன் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இம்மாதம் 13ஆம் திகதி மாலை சுமார் 6 மணியளவில் வதிரிக்கும் நவிண்டிலுக்கும் இடையில் வைத்து கைது செய்யப்பட்ட மாணவன் ராகவன்-

14 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக உறவினர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தர்மராஜா ராகவன் நடப்பதற்குக் கஷ்டப்படுவதை ஆஸ்பத்திரியில் அவதானிக்க முடிந்தது. [அ-70]

### உவர்மலை வீதியில் காரியாலயம்

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் தலைமைக் காரியாலயம் உவர்மலை வீதியில் முன்னர் மாவட்டக் கல்விக் கந்தோராக இயங்கி வந்த கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மாவட்டக் கல்விக் கந்தோர் அருகிலுள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சின் தலைமைக் காரியாலயம் கிறீன் வீதியில் தனியார் ஒருவரின் வீட்டில் இயங்குகிறது. [இ - 150]

## பொலீஸ் சேவையில் சேர 40 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஏப். 18

பொலீஸ் சேவையில் சேர 39, 820 பேர் விண்ணப்பித்தனர்.

இவர்களில் 22 ஆயிரத்து 870பேரே நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

இத் தகவலை பொலீஸ் பயிற்சிக்குப் பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. ரிச்சர்ட் விஜேசேகரா தெரிவித்தார். [உ-எ]

## பாரம்பரிய பழக்கத்திற்கு பாடசாலையில் முன்னுரிமை

### கல்வி அமைச்சின் புதிய முயற்சி

கொழும்பு, ஏப்ரல் 18

பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்குச் சுற்று நிருபம் மூலம் அறிவுறுத்தி உள்ளது.

வருகிற மே மாதம் 2 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் போது மாணவர்களை அவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் பாடசாலைக்கு அழைத்து வரவேண்டும்.

ஆசிரியர் முன் பெற்றோரை மாணவர்கள் வணங்க வேண்டும்; பெற்றோர் முன்னிலையில் ஆசிரியரை மாணவர் வணங்க வேண்டும். இறுதியில் பெற்றோரும் ஆசிரியரும் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும்,

—இப்படி அமைச்சின் சுற்று நிருபம் கூறுகிறது. (இ-எ)

## மக்களின் அடிப்படைத்தேவைகளை வழங்குவதே ஜனசக்தியின் நோக்கம்

### வேலணைக் கருத்தரங்கில் உரை

மக்களை அபிவிருத்தி செய்து அவர்களது குறைபாடுகள், அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து உதவி செய்தலே ஜனசக்தி திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

வேலணை தெற்கு, மேற்கு, வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள ஜனசக்தி உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில்நடைபெற்றஇரண்டு நாள் பயிற்சிக்கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் வேலணை உதவி அரசாங்கஅதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கருத்தரங்கில் பங்குபற்றிய உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சரசண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: இவ்வளவு காலமும் மக்கள் உதவியைப்பெறுவதற்கு அலுவலகத்தைத் தேடிச் செல்வார்கள்.

ஆனால் இத்திட்டத்தில் அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று உதவுவார்கள் எனக் கூறினார்.

இக்கருத்தரங்கில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் திரு.பாலசிங்கம் உட்பட மற்றும் சிலர் கருத்துரை வழங்கினர். (ச-167)

### ப. நோ. கூ. ச சேவைக்கு பாராட்டு

அச்சுவேலி, ஏப்ரல் 18

வலி கிழக்கு வடபகுதி(அச்சுவேலி) பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சேவைக்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வலிகிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளரின் வசதியைக் கருத்தில் கொண்டு கடமை நேரத்தை மாற்றி அமைத்தும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிளை நிலையங்களைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்து செயற்பட்டு வருகின்றது.

சங்கத்தின் விற்பனை அதிகாரிப்பையும் நேரமாற்றத்தையும் கூட்டுறவு ஆக்க [illegible] யாளர் திரு கே. பஞ்சலிங்கம் கடிதமூலம் பா[illegible]ளார். [இ - 11]

### கிண்ணியாவில் 8 பேர் பலி!

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பகுதியில் [illegible] பெற்ற வன்செயல்களில் உயிரி[illegible] 8 என்று தெரிவிக்கப்பட்டது.

## தமிழர் பண்பாடும் 'திருமறையும்

## கருத்தரங்கம்

**இடம்:** யாழ். மறைக்கல்வி நடுநிலையம்.

**காலம்: 20. 04. 1989 வியாழக்கிழமை**
காலை 8. 45 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**தலைமை:** யாழ்-ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள்

● ஆய்வரங்கு ● கண்காட்சி
● கேள்வியரங்கு ● கலைநிகழ்ச்சி
● விவாத அரங்கு

என்பன நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
**யாழ். திருமறைக் கலாமன்றம்,
223, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.**
(சி/2213)

வடக்கு - கிழக்கு மாகாணசபை

## அரசுக்கான சின்னமும் கொடியும்

வடக்கு-கிழக்கு மாகாணசபை/அரசுக்கான சின்னம், கொடி ஆகியனவற்றை தெரிவு செய்வதற்கென மாண்புமிகு முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் அவர்கள் தெரிவுக்குழு ஒன்றினை தலைமைச் செயலாளர் திரு. வி. என். சிவராஜா அவர்களின் தலைமையில் நியமித்துள்ளார்.

இது தொடர்பாக பொது மக்களிடமிருந்து குறிப்பாக ஆர்வலர், ஆய்வாளர், கலைஞர் ஆகியோரிடமிருந்து அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும், மாதிரி வடிவமைப்புக்களையும் பெறுதல் வேண்டுமென மாகாணசபையின் பேரவை உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

அதி சிறந்த மாதிரி வடிவங்களுக்கு தெரிவுக்குழுவின் விதப்புரையின் பேரில் தகுந்த சன்மானம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படும்.

தெரிவுக்குழு சில சமயம் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வடிவமைப்புக்களை ஆதாரங்களாகக் கொண்டு முற்றிலும் புதியதொரு வடிவமைப்புக்களை ஆக்கிக் கொள்ளும் உரித்தினைக் கொண்டிருக்கும். எனினும் அப்புதிய வடிவமைப்புக்கு ஆதாரமாக அமைந்தவற்றின் படைப்பாளிகளுக்குரிய சன்மானம் வழங்கப்படும்.

இச்சின்னம், கொடிக்கான வடிவமைப்புக்கள் வடக்கு - கிழக்கு மாகாணப் பிராந்தியத்தின் புவியியல், வரலாறு, தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியம், மதசார்பற்றதாக இருத்தல் வேண்டும்.

பண்டைய, தற்கால ஆய்வு நூற் குறிப்புக்கள், சிற்ப ஓவியக் குறியீடுகள், இலக்கியக் கருப் பொருட்கள் ஆகியனவற்றை ஆதாரமாகப் பயன்படுத்தலாம். பிறநாட்டு மொழிப்படைப்புக்களையும் எமது தேவைக்கு பொருத்தமாக இருப்பின் அவற்றினையும் ஆதாரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனினும் வடிவமைப்பு தனித்துவமுடையதாக அமைதல் வேண்டும்.

ஏற்கெனவே ஏதேனும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனம் தேசவியாபாரப் பொருட்கள் முதலானவற்றின் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சின்னங்களினதும், கொடிகளினதும் வடிவமைப்புக்கள் விலக்கப்படல் வேண்டும். எனினும் அவற்றினை அடிப்படையாகக் கொள்ளல் முடியும்.

இவ்வடிவமைப்பு இது வரை காலமும் எங்குமே எவராலும் பயன்படுத்தப்படாத புதியதொரு வடிவமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். அதே சமயம் எவருமே விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எளிமையுடையதாகவும் அமைதல் வேண்டும். அனைத்திலும் மேலாக திராவிடக்கலை பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் கலைப்பாங்குடையதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மதச்சார்பற்றதாக அமைதல் முக்கியம். எந்தவொரு இனத்தையோ, மதத்தினையோ, பிரதேசத்தினையோ, தொழிலையோ, பிரிவினரையோ புண்படுத்தாத வகையிலும் அதே சமயம் இப்பிராந்தியத்திலுள்ளே சமாதான சக வாழ்வை ஊக்குவிக்கக் கூடிய வகையிலே இவை அமைதல் விரும்பத்தக்கது.

வடிவமைப்புக்களை அனுப்பி வைப்போர் அவற்றிற்குரிய வர்ணங்களை தெளிவாகத் தீட்டுதல் நலம்.

தனியொருவரோ, குழுக்களோ, நிறுவனங்களோ இவ் வடிவமைப்புக்களை அனுப்புதல் முடியும்.

இதில் இலங்கையரும், தமிழ் கூறும் நல்லுலகம் எங்கிலும் உள்ள அனைவரும் மட்டுமன்றி பிற இன, மொழி நாட்டவர்களும் கூட இப் பெரும் பணியில் பங்குபற்றுதல் முடியும்.

ஒருவர் எத்தனை மாதிரி வடிவங்களையும் அனுப்புதல் முடியும். இயலுமானால் மாதிரி வடிவமைப்பிலுள்ள குறியீடுகள் அல்லது அடையாளங்கள் பற்றிய விளக்கக் குறிப்புக்களையும் சுருக்கமாகத் தந்துதவின் தெரிவுக் குழுவினருக்குப் பேருதவியாக இருக்கும்.

எனவே இத்துறையில் தமது பங்களிப்பினை நல்குவதற்கு விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு 01 – 05 – 1989இற்குப் பிந்தாமல் தமது அபிப்பிராயங்கள், கருத்துக்கள் அல்லது ஆக்கங்களை தந்துதவும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

**இவ்வடிவமைப்பினை அனுப்புவோர் பின்வரும் படிவத்தினை நிரப்பி வடிவமைப்புடன் இணைத்தல் வேண்டும்.**

### மாதிரிப் படிவம்

01. முழுப் பெயர்:
02. முகவரி:
03. தபால் முகவரி:
04. வயது:
05. வடிவமைப்பிற்கான மூலாதாரங்கள்:
06. வேறேதேனும் முக்கிய குறிப்புக்கள்:

கையெழுத்து

வடிவமைப்புக்களை அனுப்புவதற்கு இயலாவிடினும் தெரிவுக்குழுவினருக்குப் பயன்படக் கூடிய கருத்துக்களையோ அல்லது ஆதாரக்குறிப்புக்களையோ வேறு ஏதேனும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உகந்ததெனக் கருதும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்டு வருகின்ற சின்னங்கள் தொடர்பான ஒளிபடப்பிரதிகள் ஆகியனவற்றைக் கூட அனுப்பி வைக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இறுதித் தெரிவிற்கு உதவும் அடிப்படையில் அவற்றிற்குரிய சன்மானங்கள் வழங்கப்படும்.

செயலாளர்,
வடக்கு – கிழக்கு, மாகாணசபைக்கான
கொடி. சின்னம் தெரிவுக்குழு.
[சி-2276]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 உதயன் - நாளிதழ்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி வள்ளிப்பிள்ளை முருகுப்பிள்ளை

மலர்வு: 05-01-1921 உதிர்வு: 19-03-1989

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தந்தி, தபால் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு 19-04-89, புதன்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

சணவர், தாய், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உத்தனை புலோலி மேற்கு, பருத்தித்துறை.

ஸ்ரீவள்ளி ஸ்ரோர்ஸ் அல்வாய் வடக்கு

(10551)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

செல்லம்மா கணபதிப்பிள்ளை

தோற்றம்:- 07-04-1924 மறைவு:- 10-05-1088

எங்கள் அன்பு அன்னையே! எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்த தாயே! எம்மை அன்போடும் பண்போடும் வளர்த்த தெய்வமே! இவ் வையகத்தில் நற் பிரசைகளாய் வாழ வழிகாட்டிய எம் தெய்வமே! என்று எங்கள் மனதில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இதய தீபமே! உங்கள் பிரிவினை எனும் துயர் ஓராண்டு சென்றாலும் எம் இதயம் அகலாது. உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்ருேம்.

என்றும் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

45/10, நாயன்மார் வீதி, நல்லூர்.
18-4-89 (10598)

வவுனியா மாவட்டத்தில்

# இதுவரை 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணங்கள், வழங்கப்பட்டன

வவுனியா, ஏப்ரல் 18

வவுனியா மாவட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு, உற்பத்தி முயற்சிக்கான நன்கொடை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக புனர் வாழ்வு, புனர் நிர்மாணப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்குமாக இதுவரை 28 குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களின் மரண அத்தாட்சிப் பதிவுப்பத்திரம், பொலீஸ் அறிக்கை என்பவற்றுடன் கிடைக்கப்பெறும் நஷ்டஈட்டுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு நிதி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-164)

## காளைகள் விவசாயிகளின் தோழர்கள்; வண்டிச் சவாரிப் போட்டியில் உரை

சுன்ணுகம், ஏப்பிரல் 18

'காளைகள் விவசாயிகளின் உண்மையான தோழர்கள். எமது முன்னோர் காளைகளையும் பசுக்களையும் தங்கள் பிள்ளைகளிலும் பார்க்கச் சிறப்பாகப் பராமரித்து வந்துள்ளனர்'.

உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசு வழங்கி உரையாற்றிய முன்னாள் கிராமோதய சபைத் தலைவர் இ. இளையதம்பி மேற்கண்டவாறு கூறினர்.

போட்டி முடிவுகள்:

ஏ பிரிவு

முதலாமிடம்: சற்குணம், அளவெட்டி.
இரண்டாமிடம்: பிள்ளையார் சங்குவேலி.
மூன்ருமிடம்: ஐயம்பிள்ளை பூநகரி.
நான்காமிடம்: சி. இராமநாதன் சில்லாலை.

பி பிரிவு

முதலாமிடம்: வ. கணேசலிங்கம் கொல்லங்கலட்டி.
இரண்டாமிடம்: த. குணரத்தினம் மாரீசங்கூடல்
மூன்ருமிடம்: எஸ். பிரேம்குமார் அளவெட்டி
நான்காமிடம்: மு. பகீரதன் மயிலிட்டி

சி பிரிவு

முதலாமிடம்: க. சிவஞானம் அளவெட்டி
இரண்டாமிடம்: வே. முருகையா இளவாலை.
மூன்ருமிடம்: சி. செட்டி உடுவில்
நான்காமிடம்: ம சிவகுமார் அளவெட்டி

பிரபல மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி அமைப்பாளரான உடுவிலைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பி ஞாபகார்த்தக் கேடயங்கள் முதற்பரிசுகளுடன் வழங்கப்பட்டன. கந்தரோடையில் நடைபெற்ற வண்டிச்சவாரிகளைப் பார்ப்பதற்கு பெருந்தொகையானமக்கள் குழுமியிருந்தனர். (க-27)

### பா. அ. ச. தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடம் மோசமான நிலைமையில் இருப்பதைச் சீர் செய்ய யாழ் கல்வித்திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு கவலை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் இப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றுக் குறையைத் தீர்க்கவும் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக் கூட்டம் தீர்மானித்தது. (க)

### பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியையாக இருந்து தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலைக்கு மாற்றலாகிச் சென்ற திருமதி. சரஸ்வதி இராசையாவுக்கு பிரிவுபசார விழா ஒன்றுவட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியைகள் திருமதி இ. பாலசுப்பிரமணியம் செல்வி பு. காசிப்பிள்ளை, செல்வி க. சுப்பிரமணியம் மாணவர்கள் செல்வன் சஞ்சீவ் செல்வி விஜயலட்சுமி ஆகியோர் ஆசிரியை சரஸ்வதி இராசையாவின் சேவையைப் பாராட்டிப் பேசினர்கள்.

திருநாவுக்கரசு வித்தியாசாலை அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினமும் ஆசிரியையின் சேவையைப் பாராட்டிப் பேசினர். (க)

### சிவப்பிரகாச வித்தியாலய சாதனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடைபெற்றவட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றிய 6 குழுக்களில் 3 முதலாம் இடங்களையும் 1 மூன்ரும் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

மேற்படி போட்டியில் 12க்கு மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த35க்கு மேற்பட்ட குழுக்கள் பங்கு பற்றின. (க)

கூடைப்பந்தாட்டம்:

## சென்றலைட்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் சென் ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சினேக பூர்வமான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 50 — 39 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றியீட்டியது.

சென்றலைட் அணியின் சார்பில் அணித்தலைவர் சி. விஜயகுமார் 13 புள்ளிகளையும், சுந்தரலிங்கம் 19 புள்ளிகளையும் பெற்று சென்றலைட் அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

சென் ஜோன்ஸ் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு கணேஸ், புஷ்பா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-6)

### பாலர் பாடசாலை கருத்தரங்கு

கொக்குவில் ஏப்ரல்18

பாலர் பாடசாலைகளில் ஏற்படும் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றியுமான கருத்தரங்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மாளிர் குழு ஆதரவில் நடைபெற்றது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூட மண்டபத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மங்கல விளக்கேற்றி இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

திரு. சிவமகாராசாகருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

மகளிர் குழு சார்பில் திருமதி சசிதேவி கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதலாம் நாள் காலை அமர்வில் கல்வி அதிகாரி திரு.சி.புலேந்திரன் குழந்தை உளவியல் பற்றியும் திரு. இ. சிவானந்தன் (கல்வி அதிகாரி) பாடசாலை இடநெருக்கடி பற்றியும் கருத்துரைகள் வழங்கினர்.

முதலாம்நாள் மாலை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. நாகராஜா கலந்து கொண்டார். (ச-69)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சிவபாக்கியவதி சிவராஜசிங்கம்

மலர்வு: 15-01-1931 உதிர்வு: 19-03-1989

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட அணையாச் சுடரே! இந்நாளிலல்ல எப்போதுமே உம்மைமறவோம், உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்ருேம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்
மற்றும் உறவினர்கள்.

மல்வம், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 06 — 08 — 1919



இறப்பு: 19 — 03 — 1989

திருமதி தையல்நாயகிஅம்மா நாகரத்தினம்
(கண்ணம்மா)
(வட்டுக் கிழக்கு)

அம்மா! எங்கள் அருமை அம்மா!! கடமைகள் எல்லாம் செய்து முடிந்து விட்டது என்று ஓய்வு எடுத்தீர்களா? உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை வேண்டுகின்ருேம்.

எமது அன்பு அம்மாவின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தபால், தந்திமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

620 A மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

-பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். [176]

## கண்ணீர் அஞ்சலி



செல்வன் உதயகுமரன் வைத்திலிங்கம் (ரமேஸ்)

மலர்வு: 1965-08-28 உதிர்வு: 1988-04-28

திதி: 1989-04-18

உதயசூரியச் சுவட்டின் சுதந்திரக் குமரனே!

கால வருகையிலே – உன்
பாதத் தடம் பதித்தாய்
சங்கென நீ ஒலித்தாய்
சந்தனமாய் நீ மணத்தாய்!
சதி என்ற ஒன்று,
சதிராடும் போது,
சங்கமமாய் நீ மறைந்தாய்!

மாலை வானில் மறையும்
கதிர் ஒளியாய்
தாவும் பருவமதில்
தளிர் நெருப்பில்
தணலானுயே!

எங்கள் உயிர்க்கூட்டின்
உயிர்த் துடிப்பே!
வாட்டும் உணர்வில் – நாம்
வாழும் குடும்பம் – உன்
நீட்டும் நினைவில் – தினம்
தீயும் குடும்பம்
நானிலத்தில் உன் நற்பாதம்
பொற்பாதம் ஆகுமடா!

பாசமுள்ள (அம்மா) குடும்பத்தினர்.

(3374)

## பொய்யா மொழி

**குறள்:**

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவி னவர்.

**பொருள்:**

பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொது மகளிரின் புன்மையான இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் பொருந்த மாட்டார்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

18- 04 - 1989 த. பெ. இல: 23


## நல்லதொரு முன்மாதிரி!

உள்நாட்டு கைத்தறி நெசவாளருக்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் ஒன்றை கிராமக் கைத்தொழில், புடைவைக் கைத்தொழில் அமைச்சு அறிமுகப்படுத்தி உள்ளது

சகல அரசாங்கத் திணைக்களங்களும், சபைகளும், கூட்டுத்தாபனங்களும் மற்றும் அரச நிறுவனங்களும், தமக்குத் தேவையான புடைவை வகைகள் முழுவதையும் உள்ளூர் கைத்தறியாளர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கட்டாயப்படுத்தும் பணிப்புரை அரசாங்க நிறுவனங்கள் யாவற்றுக்கும் திறைசேரியினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவை அந்தப் பணிப்புரையை அச்சொட்டாகக் கடைப்பிடித்து ஆக வேண்டும். இல்லையேல் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு வேண்டிய நிதி ஒதுக்கீடும், அங்கீகாரமும் கிடைப்பது கஷ்டமாகிவிடும். மொத்தத்தில், பணிப்புரையை அரசாங்கத் திணைக்களங்கள் எந்தக் காரணம் கூறியும் மீறமுடியாது.

இந்த நடைமுறை உள்நாட்டுக் கைத்தறியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். அரசாங்க நிறுவனங்கள் தமது அலுவலகங்களின் அலங்காரத்துக்காகவும் மற்றும் உபகரணங்களுக்காகவும் வெளிநாட்டுப் பொருள்களுக்குச் செலவிடும் பணம் உள்நாட்டு உற்பத்தியாளர்கைக்கே போய்ச் சேரப் போகிறது. அது மட்டுமன்றி பாவனையாளர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகவும் அமையும்.

திரைச் சேலைகள், படுக்கை விரிப்புகள், தூரிகைகள், நோயாளருக்கான உடைகள், கைதிகளுக்கான உடைகள் ஆகியனவற்றில் ஆரம்பித்த போதிலும், இது உள்ளூர் உற்பத்திகளுக்கே ஊக்கமளிக்கும் ஒரு முன்னோடியாக அமையும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

புடைவை வகைகளுக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமை ஏனைய உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கும், கைத்தொழில் பொருள்களுக்கும் விஸ்தரிக்கப்படுவது அவசியம்.

அரசாங்க திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்கள் தமது தேவைக்கென கொள்வனவு செய்யும் பொருள்களின் எண்ணிக்கை அல்லது தொகை குறைவாக இருக்கலாம். ஆனால் தமது உற்பத்திப் பொருள்களை அரசாங்கத்திற்கு விற்கமுடியும் என்ற ஒரு நிச்சயநிலை இருந்தால், உள்நாட்டுக் கைத்தொழிலாளருக்கு, உற்பத்தியாளருக்கு, அவர்களை அறியாமலே மனத் திருப்தியும், உற்சாகமும் உண்டாகும் என்பது இயல்பு.

ஆகையால் புடைவைக் கைத்தொழில் அமைச்சின் முன்மாதிரியைப் பின்பற்றி, ஏனைய உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்த அரசாங்க நிறுவனங்களைப் பழக்குதல் வேண்டும். நிதி அமைச்சு, திறைசேரி இவ்விடயத்தில் அக்கறை எடுத்தால், கைத்தொழில் உற்பத்தித்துறை உயர்வடைய இடமுண்டு.

குண்டூசிப் பெட்டி முதல் குத்துவிளக்கு வரை காகிதாதிகள் தொடக்கம் காற்றுடி வரை, தட்டச்சு இயந்திரம் தொடக்கம் தளவிரிப்புகள் வரை அமைச்சுகள், அமைச்சர்களின் அலுவலகங்கள், உயர் அதிகாரிகளின் பணிமனைகள் உட்பட அரச நிறுவனங்கள் சகலவற்றிலும் உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டால் உள்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியில் ஒரு அடியாவது முன்னுக்கு எடுத்து வைக்கலாம்.

உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் தரம் குறைந்தவை என்று கூறி இந்தத் திட்டத்தைத் தட்டிக் கழிக்க அதிகாரிகளுக்கு இடம் கொடுத்தலாகாது. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்ற உணர்வுடன் உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்கும் மனவளம் அதிகாரிகளுக்கு மட்டுமன்றி, பாவனையாளர்களாகிய மக்களிடமும் மலர வேண்டும்.

## மெக்சிக்கோ நாட்டில் நரபலி கொடுக்கும் குழு

மெக்ஸிகோ நகரம், ஏப்ரல் 17

குழந்தைகளை நரபலி கொடுக்கும் சமயக்குழு ஒன்று மெக்ஸிகோ அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கைதாகி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் குழுவின் நான்கு உறுப்பினர்களையும் உடனே விடுதலை செய்யாவிட்டால் தொடர்ந்து குழந்தைகளை நரபலி கொடுக்கப் போவதாக அரசுக்கு அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இந்த சமயக்குழு மெக்ஸிகோவில் 13 பேரை நரபலி கொடுத்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இக் குழு உறுப்பினர்கள் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குழந்தைகள் நரபலி கொடுக்கப்பட்டால் குற்றச் செயல்கள் வெளிவராமல் இருக்கும் என்ற நம்பிக்கையில் இந்தக் குழு கொலைகளைச் செய்து வருகிறது. (எ)

## கெரில்லாக்களினல் ஆட்சியை கைப்பற்ற முடியாது!

காபூல், ஏப்ரல்.17

கம்யூனிஸ்ட் ஆதரவுபெற்ற காபூல் அரசாங்கத்தை கெரில்லாக்களால் கவிழ்க்க முடியாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் துருப்புக்கள் விலகிய பின்னர் காபூல் அரசு விரைவில் கவிழ்ந்துவிடும் என்று ஆருடம் கூறப்பட்டது பொய்த்து விட்டது என்று அவர் சொன்னர்.

கெரில்லாக்களின் பலம் எமக்குத் தெரிந்துவிட்டது. அவர்களினல் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்றும் ஜெனரல் நஜிமுதீன் கரியானி சொன்னர். [எ]

14 ஆண்டுகளாக நடந்து வரும்

# லெபனுன் சண்டை தீவிரமடைகிறது; ஷெல் தாக்கி ஸ்பெயின் தூதர் பலி!

### ஒரு நாளில் 15 ஆயிரம் ரொக்கட், ஷெல் தாக்குதல்

பேருட், ஏப்ரல் 17

லெபனுனில் கிறிஸ்தவ—முஸ்லிம் படைகளுக்கு இடையே நடந்து வரும் சண்டை தீவிரமடைந்து உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வரை இருதரப்பினரும் 15 ஆயிரத்துக்கு அதிகமான ரொக்கெட் தாக்குதலை மேற்கொண்டனர்.

பேருட்டின் கிறிஸ்தவ பகுதி மீது சிரிய ஆதரவு முஸ்லிம் படைகள் நடத்திய ரொக்கட்ஷெல் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டவர். அவர்களில் ஒருவர் ஸ்பெயின் நாட்டுத்தூதர் ஆவார். அவர் பெயர் டொன் பேட்ரிஸ். சிரிய ஆதரவு முஸ்லிம் படைகள் ஏவிய ஷெல் ஒன்று கிறிஸ்தவ பகுதியில் உள்ள ஸ்பெயின் தூதரகத்தின் மீது விழுந்தது. வீடு தரைமட்டமாகியது.

தலையில் காயமடைந்த தூதர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானர்.

தூதரின் தந்தையும் அவரது மனைவியின் சகோதரியும் இத்தாக்குதலில் மரணமானென்று கினர்.

1984இல் இருந்து ஸ்பெயின் நாட்டுத்தூதராக இருந்து வந்தார்.

தூதரின் மரணச் செய்தி கேள்விப்பட்டதும், ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் தலைநகர் மாட்ரிடில் அவசர மாநாடு ஒன்றை நடத்தினர்.

## எம்.ஜி.ஆர் நிழலில் நின்று குளிர் காய்பவர்கள்-வீரப்பன்

சென்னை ஏப் 17

'எம். ஜி. ஆர் ஒளி வீசும் வைரம்' அந்த வைரத்தை பட்டை தீட்டியவர்களில் நானும் ஒருவன்' என்று மாஜி மந்திரி வீரப்பன் கூறினர்.

எம். ஜி. ஆர் நினைவு அஞ்சலிக்கூட்டம் மயிலாப்பூரில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வீரப்பன் பேசியதாவது:

தமிழகத்தில் மக்கள் ஆரவாரத்தை தன்னகத்தே கொண்டு புகழ் பெற்று விளங்கியவர் எம். ஜி. ஆர். அவர் வாழ்ந்த காலத்தில் விட்டுச் சென்ற எச்சம், அவர் புகழுக்கும், பெருமைக்கும் சரியாக அமையவில்லையோ என்று இன்றைய நிலை எண்ண வைக்கிறது.

எம். ஜி. ஆர். கலை உலகில் புகழ் பெற்று கடைசி காலத்தில் புகழ் மங்கிய தலைவர் அல்ல. எம் ஜி. ஆர் நிழலில் பலர் நின்று குளிர் காய்கின்றோம்.

எம். ஜி. ஆர் ஒளிவீசும் வைரம் அந்த வைரத்தை பட்டை தீட்டிய தொழிலாளர்களில் நானும் ஒருவன். அந்த வைரத்தை பாதுகாக்கும் பணி என்னிடம் விடப்பட்டது.

எம். ஜி. ஆர். எனக்கு எழுதிய பல கடிதங்கள் என்னிடம் உள்ளன. தேவைப்பட்டால் வெளியிடுவேன்

கடந்த ஒரு வருடமாக நான் வீட்டில் இருக்கும் கண்ணகியாக இருந்தேன். ஒரு நாள் வரும், கோவலனுக்கு நான் ஆறுதல் கூறுவேன். மற்றவர்களைப் போல் எனக்கு 'ஜெ' போடத் தெரியாது.

இவ்வாறு வீரப்பன் பேசினர்.

இக் கூட்டத்தில் நடிகர் கோபாலகிருஷ்ணன் மற்றும் பலர் பேசினர். (எ-4)

## சார்லி சப்ளின் நூற்றுண்டு விழா

லண்டன், ஏப்ரல் 17

பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்பிளினின் நூறுவது பிறந்ததின விழா நேற்று நடந்தது.

உலக நாடுகள் பலவற்றில் அவரின் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது.

16 – 4 –1889 இல் சார்லி சாப்பிளின் லண்டனில் பிறந்தார்

(எ)

## லண்டன் திரும்பிய அழகி பமேலா ரகசியங்களை வெளியிட முடிவு

லண்டன், ஏப்ரல் 17

இந்திய அழகி பமேலா போர்டஸ் இங்கிலாந்து திரும்பி விட்டார்.

பிரிட்டிஷ் அமைச்சர்கள், எம்பிக்களுடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படுவது அம்பலமாகியதைத் தொடர்ந்து பமேலா இங்கிலாந்தை விட்டு வெளியேறினர்.

அதன் பின்னர் அவர் பாலித் தீவு சென்றுர். அங்கு மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் சிக்கி ஹொங்கொங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இருந்து சொல்லிக்கொள்ளாமல் வெளியேறிய பமேலா இப்போது இங்கிலாந்து திரும்பிவிட்டதாகச் செய்திகள் வெளிவந்து உள்ளன.

லண்டனில் தலைமறைவாக இருந்து கொண்டு லண்டன் ஈவினிங் ஸ்டாண்டர் பத்திரிகைக்கு பேட்டியளித்திருக்கிறுர்.

''எனக்குத் தெரிந்த ரகசியங்கள் அனைத்தையும் நான் சொல்லப்போகிறேன். அதற்கு நான் தயாராகி விட்டேன். நீண்ட நாட்களுக்கு அனைவரையும் காக்க வைத்துவிட்டேன்'' இப்படி பேட்டியில் பமேலா கூறியிருக்கிறுர்.

தனக்குத் தெரிந்த அரசு இரகசியங்களை பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவிக்கப் போவதாகவும் பமேலா கூறியிருக்கிறுர்.

அவரின் இரகசியங்களை பிரசுரிக்கும் உரிமையை ஒரு லண்டன் பத்திரிகை வாங்கியிருக்கின்றது. [எ]

## கலையரங்கம்

இசை மற்றும் நாடகக் கலையை வளர்க்க சீர்காழி கோவிந்தராஜன் பெயரில் சென்னையில் அரங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (எ)

## காங்கிரஸ் கூட்டம்

புதுடில்லி, ஏப்பிரல் 17

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் வருகிற 28, 29 ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெற உள்ளது.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, கட்சித் தலைவர் என்ற முறையில் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார். (எ)

## சனத்தொகை அதிகரிப்பில் சீனவை முந்தும் இந்தியா!

சென்னை, ஏப்ரல். 17

இந்தியாவின் சனத்தொகை ஆயிரம் பேருக்கு 32 பேர் வீதம் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு போவதாக ஜனதிபதி இராமசாமி வெங்கடராமன் நேற்று எச்சரித்தார்.

சென்னையில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சனத்தொகை அதிகரிப்பினல் ஏற்படவுள்ள அழிவு பற்றி நாட்டின் 80 கோடி மக்களுக்கும் சுகாதார அதிகாரிகள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டு முறையை மக்கள் அனுசரிக்கத் தவறினல் அடுத்த நூற்றுண்டில் சனத்தொகையில் சீனவையே இந்தியா மிஞ்சிவிடும் —

இப்படி ஜனதிபதி வெங்கடராமன் தெரிவித்தார்.

## சமய சந்திகள்

### மாவிட்டபுரம் இராஜராஜேஸ்வரி அம்பாள் தேர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில் இரதோற்சவம் நாளை புதன்கிழமை (19–4–89) காலை 8-45 க்கு நடைபெறும்.

அம்பாள் காலை 8 மணிக்கு தேருக்கு எழுந்தருளி 8-45க்கு இரத ஆரோஹணம். விசேட மேளக் கச்சேரிகள் இடம் பெறும்.

பகல் 10-30 மணிக்கு விசேட சொற்பொழிவுகளும், தெல்லிப்பழை விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகம் சிறுர்கள் அளிக்கும் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

பகல் 1 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(ச-68)

### தாவடி பத்திரகாளி அம்பாள் தேர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

தாவடி பத்திரகாளி அம்பாள் தேர்த்திருவிழா நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு அபிஷேகமும், 9–00 மணிக்கு அம்பாள் தேருக்கு பவனி வருகையும் இடம்பெறும். (ச)

### நாளை ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ரதோற்சவம் நாளை 19 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறுகின்றது.

காலை 7 – 00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று 8 மணிக்கு விநாயகர் சுப்ரமணியர் சகிதம் கோபுர வாசலில் எழுந்தருளுவார். 9 மணியளவில் சித்திரத் தேரில் அம்பிகை ஆரோகணித்து வீதியுலா வருங் காட்சி இடம்பெறும்.

நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். பிற்பகல் நவசக்தி அர்ச்சனை நடைபெற்று பச்சை சாத்தி அம்பாள் ரதத்திலிருந்து இறங்கி ஆலயம் சேரும் வைபவமும் நிகழும்.

### சார்ஜன் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

திருநெல்வேலி கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தில் குருபீடாதிபதி, ஸ்ரீ மத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் தலைமையில், சார்ஜன் சுவாமிகள் குருபூசை விழா சிறப்பாக நடைபெற்றது.

பண்ணிசைச் செல்வர், நெல்லை திரு. வே. தம்பிஐயா, நயினை செல்வன் கருணுகரன். தேவார இசைமணி தாவடியூர் திரு. இரா. திருஞானசம்பந்தன், புளியங்கூடல் செல்வி மதிவதனி மயில்வாகனம் ஆகியோரின் ''திருமுறைப் பண்ணிசை'' நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (ச)

### அங்குச பாணீ!

அங்குச பாணீ! என்றும்
அடியவர் போற்றும் மூர்த்தி!
பொங்குயர் துயரம் போக்கிப்
போக்கியம் பொருள்பண் டத்தை
எங்களுக் கீந்து ஐயா!
என்றும் நாம் இனிதே வாழத்
துங்கமார் மறைகள் போற்றும்
தூமணீ! அருள்பா லிப்பாய்!

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்.

அங்குச பாணி = விநாயகர், பாணி = கை,
போக்கியம் = செல்வம், துங்கம் = உயர்வு,
மறை = வேதம், தூமணி = பரிசுத்தம் பொருந்தியமணி

[இன்று நல்[illegible] 8 ஆம் திருவிழா]

மே முதலாம் திகதியுடன்:

# காங்கேசன்துறை கல்வி வட்டாரம் ஐந்து கொத்தணிகளாக இயங்கும்

பலாலி, ஏப்ரல் 18

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம் எதிர் வரும் மே முதலாம் திகதயுடன் ஐந்து கொத்தணி அமைப்புக்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கவுள்ளது.

ஏற்கனவே கொத்தணி அமைப்பின் முன்னேடித் திட்டமாக வலயங்களாகப் பிரிக்கப்பட்டபோது நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த அமைப்பு தற்போது ஐந்தாக மாற்றப்பட்டு கொத்தணியாக மாறுகின்றது.

இதன்படி தெல்லிப்பளைக் கொத்தணியின் மையப் பாடசாலையாக யூனியன் கல்லூரியும், அம்பனைக் கொத்தணியின் மையப் பாடசாலையாக மகாஜனக் கல்லூரியும், காங்கேசன்துறைக் கொத்தணியின் மையப்பாடசாலையாக நடேஸ்வராக் கல்லூரியும், அளவெட்டிக் கொத்தணியின் மையப் பாடசாலையாக அருணேதயாக் கல்லூரியும், மல்லாகம் கொத்தணியின் மையப் பாடசாலையாக மல்லாகம் மகா வித்தியாலயமும் இயங்கவுள்ளன.

மல்லாகம் – அளவெட்டி வலயம் என்றிருந்த ஒரு அமைப்பே இரண்டாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியான இரண்டு கொத்தணிகளாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [ச-119]

### கம்பளை ஸ்ரீமுத்துமாரி சங்காபிஷேகம்

நுவரெலியா, ஏப்ரல் 18

கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் அண்மையில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது.

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ பாஸ்தாபீட பிரதம குரு ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள் கிரியைகளை நடத்தினர்.

சங்காபிஷேகத்தை தொடர்ந்து விசேஷ பூஜையும் அன்னதானமும் நடைபெற்றது.

### கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரசுவாமி சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

கோப்பாய் ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோயில் குடமுழுக்கு தினவிழா நாளை 19 ஆம்திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டிப் பகல் சங்காபிஷேகமும், மாலை திருக்கல்யாணமும், தண்டிகை உற்சவமும் நடைபெறும்.

மேற்படி உற்சவங்கள் யாவும் கோப்பாய் சிவஸ்ரீ [illegible] இ. பிரணதார்த்திஹரக்குருக்களால் நடத்திவைக்கப்படும். (ச)

## ரயிலில் இடமில்லாததால் தனியார் பஸ்களை நாடினர்

கரவெட்டி, ஏப்ரல் 18

யாழ் தேவியில் இடமில்லாததால் ஏராளமான பிரயாணிகள் தனியார் பஸ்களை நாடினர்.

கடந்த ஞாயிறு இச்சம்பவம் நடந்தது.

ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு புறப்பட்ட யாழ்தேவிக்கு பெரும் எண்ணிக்கையானேர் படையெடுத்தனர்.

காலை 7.30 மணிக்கு கொடுக்க ஆரம்பித்த பயணச் சீட்டுக்கள் 9 மணி வரை வழங்கப்பட்டன.

ரயில் நிரம்பி வழிந்து புறப்பட்டபோது பலர் தனியார் பஸ்களை நாடவேண்டி ஏற்பட்டது. [இ-70]

### பதவி மாற்றம்

நெடுந்தீவு பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்கள் கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. இங்கு மூன்று பயிர்ச்செய்கை ஊழியர்கள் உள்ளனர். (க-111]

### புதிய அதிபர்

அச்சுவேலி வடக்கு றேமன் கத்தோலிக்க பாடசாலையின் புதிய அதிபராக திரு. எஸ். நடேசு நியமிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி வடக்கு றே.க. பாடசாலை அதிபராக கடமையாற்றிய திரு. எஸ். சுப்பிரமணியம் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதை அடுத்து அதிபராக திரு. எஸ். நடேசு நியமிக்கப்பட்டுள்ளார்.




ஓர் அராபியர் முஹம்மது (ஸல்) அவர்களிடம் வந்து இறை தூதரே! (ஸல்) நான் சுவர்க்கம் பிரவேசிப்பதற்கு ஒரு செயலைச் சொல்லித்தாருங்கள் என வேண்டிக் கொண்டார். அதற்கு (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை நீர் வணங்குவீராக, அவனுக்கு எதனையும் ஒப்பாக்காதீர். தொழுகையை நேமமாகக் கடைப்பிடிப்பீராக! கடமையாக்கப்பட்ட (சகாத்) ஏழைவரியையும் நிறைவேற்றுவீராக! ரமழான் மாதத்தில் நோன்பையும் தவருது நோற்று வருவீராக! சுவர்க்கம்நுழைவீர் என்றுவிடைபகர்ந்தார்கள்

ஸஹர் முடிவு – 4–28
நோன்பு திறக்கும் நேரம் – 6 19

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஜோன்சன் ✯ JOHNSON

வெளியிணை இயந்திரங்களையும்,
உறுதிப்பாகங்களையும்
ரோலர் மடிநூல் முக்கால், ஒன்று,
ஒன்றரை இரண்டு மில்லி மீற்றர் வகைகள்,
போயா வலைநூல் போன்ற கடற்றொழில்
உபகரணங்களையும் மலிவு விலையில் வாங்க

**செனட். அன்ரனீஸ்.**

63, யூதாததேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.



# உதயன்

18-04-1989 செவ்வாய்க்கிழமை



## வாடிக்கையாளர்களே!

எம்மிடம் சொற்ப கையிருப்பே உள்ள ஜோன்சன் (H.P. 10) வெளியிணை இயந்திரங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்!

முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரோலர் மடிநூல் வகைகளையும், போயா வலைநூல் வகைகளையும் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள். வெளியிணை இயந்திர உதிரிப்பாகங்களுக்கு

**சென். அன்ரனீஸ்,**

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


## செய்திச் சாரம்

### முன்னாள் எம். பி காலமானார்

கொழும்பு, ஏப்ரல் 18

கல்முனைத் தொகுதியின் முன்னாள் எம். பி. கேட்-முதலியார் எம். எஸ். காரியப்பர் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 92.

இவர் அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் மாமனாராவார்.

### இன்று வெள்ளோட்டம்

இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். (க-163)

### குடும்பஸ்தர் ஆஸ்பத்திரியில்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டி, மாடந்தைப் பகுதியில் இடம்பெற்ற தேடுதலின்போது குடும்பஸ்தர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

எம். செல்வரத்தினம் என்னும் இவர் வல்வை இந்திராணி வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். (ஒ-160)

### 10 மாதங்களாக தடுத்து வைப்பு

மாங்குளம், ஏப்ரல் 18

மாங்குளம் இந்திய இராணுவ முகாமில் கடந்த பத்து மாதங்களாக இளைஞர்கள் சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவைச் சேர்ந்த ரவிச்சந்திரன், ரவீந்திரன், மோகனதாஸ் வவுனிக்குளத்தைச் சேர்ந்த பரிமளநாதன், வட்டக்கச்சியைச் சேர்ந்த கதிர்காமநாதன் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (ஒ-94-113)

### 'அக்னி'ப் பரீட்சை

புதுடில்லி, ஏப் 18

இந்தியா தனது முதலாவது நீண்டதூர ஏவுகணை 'அக்னி'யை வரும் வியாழக்கிழமை பரீட்சிக்கவிருக்கிறது.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் இப்பரிசோதனை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 18

ஆழியவளைப் பகுதியில் படையினரைக் கண்டு ஓட முற்பட்டதாகக் கூறப்படும் சிலர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

கந்தையா பாலசிங்கம் (வயது 30) சிவஞானம் செல்வகுமார் (வயது 20) ஆகியோரே அந்த இருவருமாவர். [ஒ-9]

### மண்டூரில் இரு இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்பைச் சேர்ந்த மண்டூர்ப் பகுதியில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இரு இளைஞர்களதும் சடலங்கள் மண்டூர் முருகன் கோவில் சந்தியிலிருந்து மீட்கப்பட்டன.

வீ உதயகுமார் [வயது 22], க. ரவிச்சந்திரன் [வயது 25] ஆகியோரே அவ்விருவரும் ஆவர். இருவரும் மண்டூரைச் சேர்ந்தவர்கள்.

ஒருவர் ரெலோ இயக்கத்தையும் மற்றவர் ஈ. பி. ஆர். எல். எவ். ஐயும் சேர்ந்தவர் எனப் பின்னர் தெரிவிக்கப் பட்டது. (ஒ-21)

### துறைமுகங்கள் ஸ்தம்பிதம்

புதுடில்லி, ஏப்ரல் 18

இந்தியாவில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

இதனால் நாட்டில் உள்ள சகல துறைமுகங்களிலும் ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் ஸ்தம்பித்தன. (அ-எ)

## அமைதிப்படைச் சாரதியை கைது செய்யுமாறு உத்தரவு

பாடசாலை மாணவனை மோதியதாகக் கூறப்படும் இந்தியப்படைக்குச் சொந்தமான வாகனத்தின் சாரதியை அடையாளம் கண்டால் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மட்டக்களப்பு பதில் நீதிபதி திரு. கா. தங்கவடிவேல் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சின்ன ஊறணிச் சந்தியில் நடைபெற்ற விபத்தில் திருப்பெருந்துறை வாசியான ஏ.மகேந்திரராஜன் (வயது 8) என்ற மாணவன் பலியானார்.

மேற்படி மரண விசாரணையில் விபத்து, மரணம் எனத் தீர்ப்பு வழங்கிய பின்பு மேற்கண்ட உத்தரவைப் பதில் நீதிபதி பிறப்பித்தார். (ஒ-21)

## இந்திய ராணுவ அதிகாரிகள் 15 பேருக்குத் தண்டனை

### லோகசபையில் மந்திரி தகவல்

புதுடில்லி ஏப்ரல் 18

இலங்கையில் இருந்து திரும்பி வரும் இந்திய படையினர் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒலிப்பதிவுக் கருவிகள், வானொலிகள் போன்ற பொருள்களை கடத்தி வருகிறார்கள்.

இப்படிக் கடத்தலில் ஈடுபட்ட 21 ராணுவ அதிகாரிகள் பிடிபட்டனர். இவர்களில் 15 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இந்திய நாடாளுமன்றத்தில் [லோக சபையில்] பாதுகாப்பு இணை அமைச்சர் சிந்தாமணி பாணிக்கிரஹி வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்விகளுக்கு இணை அமைச்சர் எழுத்து மூலம் அளித்த பதிலில்-

''சுங்க வரி விதிக்கக்கூடிய எந்தப் பொருளையும் மறைக்கக்கூடாது என்று இலங்கையில் இருந்து திரும்பும் இந்திய இராணுவத்தினருக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து திரும்பும் இந்திய இராணுவத்தினர் அனைவரையும் சுங்கச் சோதனைக்கு உட்படுத்த தாம்பரம் விமான நிலையம், சென்னை துறைமுகம் ஆகிய இடங்களில் இராணுவப் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்- என்று கூறியிருந்தார். (அ-எ)

## தோட்டத் துரைமார் 17 பேர் இதுவரை சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப்ரல் 18

சேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் துரைமார் (சுப்ரின்டன்ட்) 17 பேர் இதுவரை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தோட்டப் பங்களாக்களில் வசிக்க முடியாது என்று கூறி சுப்பிரிண்டன்கள் கொழும்பு திரும்பினர்.

நிலைமையைச் சமாளிக்க ஒவ்வொரு சுப்பிரின்டன்னுக்கும் ஆறு ஊர்காவல்படையினர் காவலுக்கு நியமிக்கப் பட்டனர்.

ஆனால் ஊர்காவல் படையினரும் இப்போது வேலை வேண்டாம் என்று கூறி விலகி வருகின்றனர். (ஒ - எ)

## இந்தியப்படை அணிகள் திருமலையிலிருந்தே புறப்படும்

கொழும்பு, ஏப்ரல் 18

விரைவில் தாயகம் திரும்ப உள்ள இந்திய அமைதிப்படையின் ஐந்து படையணிகள் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்தே பயணமாகும் என்று கொழும்பில் உள்ள இந்தியப் பதில் தூதர் திரு. செரிஜோர்ஜ் சொன்னார்.

கொழும்புத் துறைமுகம் ஊடாக இந்திய அமைதிப் படையினரைத் திருப்பி அனுப்பிவைக்கும் நோக்கம் இல்லை என்றும் அவர் சொன்னார்.

திருமலை பிரிமா இறங்கு துறையில் இறக்குமதி வேலைகள் இடம்பெறுவதால் தாயகம் திரும்ப கொழும்பு துறைமுகத்தைப் பாவிக்கும்படி இந்திய அமைதிப் படைக்குக் கூறப்பட்டிருந்தது. (ஒ-எ)

## ● நேற்றும் இல்லை...!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். பொலீஸ் பிரிவில் முறைப்பாடுகள் ஏற்கும் வேலைகள் நேற்றும் நடைபெறவில்லை.

ஆனால் திங்கட்கிழமை முதல் பொலீஸ் நிலையம் இயங்கும் எனவும், அங்கு புதிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவர் என்றும், அவர்களினால் முறைப்பாடுகள் ஏற்பது, முறைப்பாட்டுப் பிரதி வழங்குவது போன்ற பணிகளைச் செய்ய ஏற்பாடாகி இருந்தது.

எனினும் நேற்றுப் பொலீஸ் பகுதியில் கடமைகள் எதுவும் நடைபெறவில்லை. [ஒ-9]

### பருத்தித்துறை இல. வங்கியில்

பருத்தித்துறை, ஏப்ரல் 18

இலங்கை வங்கியின் புதிய சேமிப்புச் சான்றிதழ் திட்டம் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் நாளை 19 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தலைமை வகிப்பார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [ஒ-118]

### நல்லூர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் வீட்டிற்குள் நுழைந்தனர். வீட்டில் இருந்தவர்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி பணம் உட்பட அனைத்துக் கைவசமுள்ள பொருட்களையும் தரும்படி பயமுறுத்தினர்.

தம்மிடம் பணம் இல்லை என கூறியதும் அவர்களைக் கோஷ்டியின் ஒரு பிரிவினர் தமது கண்காணிப்பில் வைத்திருக்க மற்றொரு பகுதியினர் வீடு முழுவதையும் ஆராய்ந்து அங்கிருந்த நகைகளை எடுத்துக்கொண்டனர்.

சுமார் 15க்கும் அதிகமானவர்கள் கோஷ்டியில் அடங்கியிருந்தனர் என்றும், வீட்டைச் சுற்றியும் துப்பாக்கிகள் சகிதம் சிலர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிகிறது.

இரவு 8-40 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. முன்னதாக வீட்டுக்கான மின் சார வெளிச்சமும் துண்டிக்கப் பட்டது.

கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் ''துப்பாக்கிக் குண்டில் ஒன்றைக்கூடப் பயன்படுத்தாமல் செல்கின்றோமே'' எனச் சகாக்களிடம் கூறி வருத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ஒ-111)

### புங்குடுதீவுவை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் வேலை செய்து வந்த தனது தம்பியையும், சுன்னாகத்தில் வேலைசெய்து வந்த மற்றொரு தம்பியையும் வரவழைத்து கணவனைப் பயமுறுத்தி இருக்கின்றார்.

சம்பவ தினம் வாக்குவாதம் மோசமடையவே, ஆசிரியை தமது கணவரை தம்பிமார்கள் இருவருடன் சேர்ந்து தாக்க ஆரம்பித்து கோடரி, கத்தி, கம்பி போன்றவற்றால் அடித்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

சத்தம் கேட்டு தோட்ட மக்கள் செல்வதற்கு முன் மண்டையில் காயம் ஏற்பட்டு இரத்தப்பெருக்கு ஏற்பட்டு அவ்விடத்திலேயே இறந்துவிட்டார் கணவர்.

தம்பிமார் இருவரும் தப்பிச் செல்வதற்காக லொறி ஒன்றில் ஏறி தலவாக்கொல்லையில் இருந்து செல்லும்போது பொலீஸாரால் துரத்தப்பட்டு அட்டனில் வைத்து கைது செய்யப்பட்டார்கள்.

கணவனைத் தாக்கியதை ஒப்புக்கொண்ட ஆசிரியையும் கைது செய்யப்பட்டு நுவரெலியா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கொலை செய்யப்பட்டவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனவும் அவரது சடலம் கடந்த 13 ஆம் திகதி வரை கொட்டகலை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது எனவும் எமது நுவரெலியா செய்தியாளர் அறிவித்துள்ளார். (ஒ-58)

### 20 ஆயிரம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

20 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான தொகையை வைப்புச் செய்தவர்களுக்கு வைப்புச் செய்த பணத்தில் 50 சத வீதமே வழங்கப்படும். ஆனால் எப்படியும் வழங்கப்படும் தொகை 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் போகாது.

இக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கெனத் தனியான பிரிவு ஒன்று மத்திய வங்கியில் அமைக்கப்பட்டுள்ளது.

17 நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளை மத்திய வங்கி முடக்கி வைத்துள்ளது.

முன்னர் குறிப்பிட்ட ஐந்து நிறுவனங்கள் தவிர ஏனைய நிதி நிறுவனங்களில் பணம் வைப்புச்செய்தவர்களுக்கு மத்திய வங்கி பின்னர் கொடுப்பனவுகளை வழங்கும் என்று அறிவிக்கப்பட்டது. (அ-எ)

### அச்சுப் பிழை

நேற்றைய உதயனில் பிரசுரமான, நுணுவில் மேற்கு காசிப்பிள்ளை சதாசிவத்தின் மரண அறிவித்தலில், இரண்டாவது பந்தியின் கடைசி வரிக்கு முந்திய வரியில் ஆ. பொன்னம்பலம் (கனடா) என்பதற்குப் பதிலாக ஆ. பொன்னம்மா (கனடா) என்று அச்சுப்பிழை ஏற்பட்டுவிட்டது.


உங்கள் தேவை!

எங்கள் சேவை!!

● தரமான
● தெளிவான
● சிக்கனமான

தமிழ் ஆங்கில
தட்டச்சு - றோணியோ
வேலைகளுக்கு
★ ★ ★

**ஷப்ரூ** (சேவைப் பகுதி)

இல 19, 2 ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(/1946)



## தேவை

இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய அலுவலகத்திற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் கச்சேரிக்கு அல்லது பட்டணத்துக்கு அண்மையில் விசாலமான வளவில் சகல வசதிகளைக் கொண்டதும் 2500 ச. அடிக்கு மேல் பரப்பளவு கொண்டதுமான ஓர் வீடு அல்லது கட்டடம் உடனடியாகத் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இலங்கை மின்சார சபை அலுவலகம்,
பிறவுண் வீதி,
அரசடி வீதிச்சந்தி,
யாழ்ப்பாணம். (C/2215)



பிரத்தியேக வகுப்புக்கள்

கணக்கியல்

A/L 91

ஆரம்பம்:

21-04-1989

ஆசிரியர்

ஸ்ரீ

393/47, கோவில் வீதி
நல்லூர்

குறிப்பு: முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

(C/2296)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பரம்சோதி

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் பரிசோதகரும் முன்னாள் கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளரும்)

புலோலி கிழக்கு தும்பளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் பரிசோதகரும் முன்னாள் கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளருமான திரு. சுப்பிரமணியம் பரஞ்சோதி காலமானார்.

அன்னார் திருமதி சு. கமலாட்சியின் அன்புக் கணவரும் அமரர் சு. பாலசிங்கம் (அப்போதிக்கரி), திரு. சு. வரதராசா (ஓய்வுபெற்ற ஆண் தாதி), திருமதி தங்கரத்தினம் சின்னத்தம்பி, திருமதி கெங்காதேவி சுப்பிரமணியம், திரு. சு. முருகப்பா (அதிபர் வெளிக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா), திருமதி நாகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரின் சகோதரரும், டாக்டர் சிதம்பரநாதன் இராமலிங்கம், திரு. சி. சாம்பசிவம் (நில அளவையாளர்) திருமதி விஜயலட்சுமி பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-04-1889 காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இறுதிக் கிரியைகளுக்காக பூதவுடல் தும்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: சட்டத்தரணி சு. பா. சுப்பிரமணியம்

நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை. [10612]

### திருமதி சி. சர்வாம்பாள் அம்மா

அத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுருவை. சிவசுப்பிரமணியம் குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், சிவசங்கர சர்மா, சந்தானகிருஷ்ணசர்மா, சந்தானகோபாலசர்மா, மணிவண்ணசர்மா, வையந்திமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆகிய சர்வாம்பாள் அம்மா 17-04-89 ல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-04-89 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் 71/3, கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

தகவல்:
அன்புக் கணவன்,
பிள்ளைகள்.

71/3, கோவில் வீதி,
நல்லூர். [10613]

### திரு. நா. சிவானந்தபாகு

கரம்பன் கிழக்கைச் சேர்ந்த நாகமுத்தி பத்மாவின் அன்பு மகன் சிவானந்தபாகு 14-04-1989 டென்மார்க்கில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற ஜெயந்திமாலா, வசந்திமாலா, காந்திமாலா, கலைமகள், சிவறஞ்சன் ஆகியோரின் அன்புத் தமையனும், கிருஷ்ணபாலனின் அன்பு மைத்துனருமாவார். இவ் றிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நாகமுத்தி

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. [185]

### பெரியதம்பி கந்தப்பிள்ளை

நீர்வேலியைச் சேர்ந்த பெரியதம்பி கந்தப்பிள்ளை 17 04-89 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார், அன்னார் திருமதி நீலாட்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும், கமலாதேவி, கருணானந்தன் (ஜேர்மனி), சரோஜினிதேவி, கிருபானந்தன், நிர்க்குணானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மகேஸ்வரன் (தொலைத்தொடர்பு திணைக்களம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி முத்துப்பிள்ளை வைத்திலிங்கம், பொன்னம்பலம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மீனாட்சி, விசாலாட்சி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற கோபாலபிள்ளை. காலஞ்சென்ற பாக்கியம். பசுபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலகவதி, சிவபாக்கியம், இராசம்மா, அரசகேசரி தர்மலிங்கம், செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்பு சிறியதகப்பனுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 18-4-89 செவ்வாய்க்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க- கிருபானந்தன்

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (189)

### K. பாலசுப்பிரமணிய ஐயர்

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலய அர்ச்சகர் K.பாலசுப்பிரமணிய ஐயர் 16-4-89 இல் காலமானார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 17-4-89 நேற்று நடைபெற்றன. உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. ஸ்ரீரமணன்

கைலாசக் ஏஜென்ஸி,
சுழிபுரம். (C 2214)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 18 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org